# திராவிடத்தின் பிதாமகரே! தமிழ் இனத்தின் பாதுகாவலரே!



திராவிடம் பெற்றெடுத்த தவப்புதல்வரே !
தங்கத்தமிழ்நாடு தேர்ந்தெடுத்த நிரந்தர முதல்வரே !
தன்மானத்தமிழினம் கண்டெடுத்த சரித்திர நாயகரே !
ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை காவலரே !
சிறுபான்மையினரின் பாதுகாவலரே !
உலகத்தமிழர்களின் தாயுமானவரே !
உழைப்பாளிகளின் உறவானவரே !

உம் காலடி பாட்ட பின் தான்
கீழடி புகழ் வெளிச்சம் பெற்றது !
நீர் அரியணை ஏறிய பின் தான்
தமிழர் வாழ்வு புது ஏற்றம் கண்டது !

மார்ச் 1 உமக்கு பிறந்தநாளாம் !
உம் தலைமையில்
செயல்பட்டு வரும்
கழக உடன்பிறப்புகளுக்கதுவே
ஆகச்சிறந்த பொன்னாளாம் !
உலகமே அதிசயிக்கும்
உம் அரசாட்சி !
நம் கழகமே
தமிழ்நாட்டின் மனசாட்சி !

மாணவ செல்வங்களுக்கு அளித்திட்டீர் ஆயிரம் திட்டம் !
அது பொறுக்காமல்
பொங்கி ஆர்ப்பரிகிறது
ஆரியக்கூட்டம் !
படிக்கும் பிள்ளைகள்
சத்தாய் வளர,
முத்தாய் அளித்திட்டீர்
முதல்வர் காலை உணவுத்திட்டம் !
நாளைய தலைமுறையின் படிக்கும் ஆர்வத்தை தூண்ட
நான் முதல்வன் திட்டம் !
தாயுமானவன் திட்டம்!
தமிழ்ப்புதல்வன் திட்டம்!
ஐ.நா வே வியந்து போற்றும்
இல்லம் தேடி கல்வித்திட்டம்!
பெண்கல்வியை ஊக்குவிக்கும்
புதுமைப்பெண் திட்டம்!

அப்பப்பா ! !

எத்தனை,எத்தனை திட்டங்கள்
உம் சீரிய சிந்தனையால் !

அந்த நன்றிப்பெருக்கோடு
மாணவ சமுதாயம் உளமார
உமை அழைக்கிறது
"அப்பா" என்று,
தப்பாக கூட நல்லது
ஏதும் செய்திடாத,
அடாத கூட்டமொன்று
"அப்பா" என்றழைப்பது கேட்டு பித்துப்பிடித்து அலையுதங்கே !

தேசியக்கல்வி கொள்கையென்று
கொல்லைப்புறவழியில் குலக்கல்வியை புகுத்த நினைத்த
பாசிச கும்பல்,
கல்வியை வளர்க்க திட்டம் தீட்டாமல்,
இந்தியை வளர்க்க திட்டம் தீட்டி
இன்று,மும்மொழி கொள்கையை ஏற்றாலே கல்விநிதி
என அச்சுறுத்த,
சுயமரியாதை சிங்கமென
வெகுண்டெழுந்த உம் தீரம்
கண்டு சிலிர்த்து போனது
தமிழ் இனம் !
வாயடைத்து போனது இந்துத்துவம் !

இன்னும் 1000 ஆண்டுகள் கடந்தாலும்,
திராவிட மாடலின் பெயர் சொல்லும்
நீங்கள் அளித்துள்ள
ஆக்கபூர்வ திட்டங்கள் !

திராவிட பேரரசரே !
இன்னுமொரு மொழிப்போருக்கு
நாங்கள் தயாரென
உம் பின்னால்
அணி திரண்டுள்ளது
தமிழ் இனம் !

ஏனெனில் நீரே
எம் சமூகநீதி போராளி !
ஆரிய பாசிசத்திற்கு எதிராளி !
எல்லாரும்,எல்லாமும் பெற வேண்டும்,
தமிழர் வாழ்வு மலர வேண்டும் !
அதுவே நின் குறிக்கோளாகும் !
2026 லிலும் நீரே தமிழ்நாட்டை ஆள வேண்டும் !
நாட்டு மக்கள் வளம் பெற வேண்டும் !
நீவிர் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் !
வாழ்த்துகிறேன் ! வணங்குகிறேன் !



**முனைவர்**
**பி.பழனியப்பன்**
செயலாளர்
தருமபுரி மேற்கு
மாவட்ட தி.மு.க.

---



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், தியாகதுருகம் பிரதான சாலை, கள்ளக்குறிச்சி. |
| | மாலை 4.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அலுவலகம், ராஜா நகர், கள்ளக்குறிச்சி. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 26-02-2025



---

### தமிழர்களுக்கு மொழியுணர்வு பற்றி

# ஆளுநர் ஆர்.என்.ரவி பாடம் எடுக்க வேண்டாம்!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



சென்னை, மார்ச் 1 -

தமிழ் - தமிழ்நாடு தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றின் மீது தொடர்ந்து வெறுப்பை உமிழும் ஆளுநர் ரவி தமிழர்களுக்கு மொழியுணர்ச்சியை பற்றி பாடம் எடுக்க வேண்டாம் என்று சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு பொருளாதாரத்திலும் கல்வியிலும் பெற்றிருக்கும் வளர்ச்சியை பொறுக்க முடியாமல் தமிழ்நாட்டின் மீது வெறுப்பை உமிழ்வதையே தனது கடமையெனக் கருதி செயலாற்றி வருகிறார் ஆளுநர் ரவி.

தனது அரசியலமைப்பு கடமைகளை மறந்து ஆதாரமற்ற அவதூறுகளை வைத்து தமிழ்நாட்டை இழிவுப்படுத்தும் அரசியலை செய்வதற்காகவே ஒன்றிய பாஜக அரசு ஆர்.என்.ரவியை ஆளுநராக வைத்திருக்கிறது.

தனது சமூக வலைதளக் கணக்கை இதற்காகவே பிரதானமாக பயன்படுத்தி வரும் ஆளுநர் ரவி தனது இன்றையப் பதிவில் "இந்தப் பகுதி, மனித ஆற்றல் மற்றும் இயற்கை வளங்களால் நிறைந்துள்ளது, ஆனாலும் இது புறக்கணிக்கப்பட்டு பின்தங்கியுள்ளது போன்ற உணர்வைத் தருகிறது. தொழில்மயமாக்கலுக்கான மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் இருந்தபோதிலும், இங்குள்ள மக்கள் வாய்ப்புகள் புறக்கணிக்கப்பட்டவர்களாக உணர்கிறார்கள்" எனக் கூறியிருக்கிறார்.

தமிழ்நாடு எதில் பின்தங்கியுள்ளது என ஆளுநர் ரவியால் சொல்ல முடியுமா?

கல்வியில், மருத்துவத்தில், பொருளாதாரத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சி இந்திய மாநிலங்கள் எதனோடும் ஒப்பிட முடியாத அளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை ஒன்றிய அரசு வெளியிட்டிருக்கும் புள்ளிவிவரங்களே சொல்லும், அதையெல்லாம் ஆளுநர் ரவி படித்தால்தானே? படித்தாலும் தமிழ்நாட்டின் மீது வெறுப்பேறிய கண்களுக்கு அவையெல்லாம் எப்படித் தெரியும்?

தமிழ்நாடு அடைந்திருக்கும் வளர்ச்சி இருமொழிக் கொள்கையினால் சாதித்தவை, தமிழ்நாட்டில் எப்படியாவது இந்தியை திணிக்கலாம் அதற்கு புதிய கல்விக் கொள்கையை ஒரு வழியாக வைத்து உள்நுழையலாம் எனும் ஆதிக்கவாதிகளின் சதியை அறியாதவர்களா தமிழர்கள்?

தமிழ் - தமிழ்நாடு - தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றின் மீது தொடர்ந்து வெறுப்பை உமிழும் ஆளுநர் ரவி தமிழர்களுக்கு மொழியுணர்ச்சியை பற்றி பாடம் எடுக்க வேண்டாம்.

சனாதனத்தையும் சமஸ்கிருதத்தையும் தமிழ்நாட்டில் காலூன்றச் செய்திட குட்டிக்கரணம் போடும் ஆளுநரின் நடவடிக்கைகள் தமிழ் மண்ணில் வேறூன்றவில்லை. அப்படித்தான் மும்மொழி கொள்கையும் மூக்கறுபட்டு நிற்க போகிறது.

மொழித் தேர்வு எது? மொழித் திணிப்பு எது? என்பது எங்களுக்கு தெரியும், இந்த நாடகங்கள் எல்லாம் இங்கே எடுபடாது.

இவ்வாறு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### மின்வாரியத் தொழிலாளர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கி வரும்

# கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாளையொட்டி நல உதவிகள்!

## மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிவிப்பு!



சென்னை, மார்ச் 1 -

தமிழ்நாடு மின்சார வாரியத்தல் பணியாற்றும் தொழிலாளர்கள், அலுவலர்களுக்கு வரலாறு காணாத வகையில் சலுகைகள் வழங்கி வரும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு, மின்கழக தொ.மு.ச. சார்பில் மார்ச்.1-ல் பல்வேறு கலை உதவிகள் வழங்கப்படுகிறது என்று அதன் பொதுச் செயலாளர் பா.மணிமாறன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பாக தமிழ்நாடு முழுவதும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவையொட்டி மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க பொதுச்செயலாளர் பா.மணிமாறன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்கள் மற்றும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் என 2 இலட்சம் நபர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்திய தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை, எளியோர்களுக்கு, நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு முழுவதும் மின்கழகத் தொ.மு.ச. சார்பாக நடைபெறுகிறது.

மார்ச்-1 தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும், திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அண்ணாசாலையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்களுக்கு மற்றும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வு, பணிபுரிகிறவர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் பாதுகாப்பு வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம், அகவிலைப்படி உயர்வு, கருணைத்தொகையுடன் போனஸ், அதிகாரிகளுக்கு பொங்கல்பரிசு, என எண்ணற்ற சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சி மார்ச் 3ம் தேதி திங்கட்கிழமை தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மின்கழகத் தொமுச தலைமைச் சங்க அலுவலகத்தில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் உள்ள தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்கள், சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்கள் என 300 பேர்கள் மற்றும் ரூ.1500/ மதிப்புள்ள சமையலுக்கு தேவையான தரமான அரிசி மற்றும் மளிகைப் பொருடகள் அடங்கிய தொகுப்பு பைகளில் நல உதவிகள் வழங்கப்படுகிறது. மதியம் சுமார் 500 பேர்களுக்கு சுவையான அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

2021ம் ஆண்டு, மே மாதம் 7ம் நாள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு ஏற்று கழகத்தலைவர் அன்புத்தளபதி அவர்கள், அப்போது நம்மை சூழ்ந்திருந்த கொரானா நோயின் தாக்கத்திலிருந்து நம்மை காப்பாற்றினார்கள். மகளிர்களுக்கு விடியல் பேருந்து பயணம், பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், "இல்லம் தேடி கல்வித் திட்டம்" , புதுமைப்பெண் திட்டம், முதல்வர் மருந்தகம், நான் முதல்வன் திட்டம், எல்லாவற்றிற்கும் மணிமகுடமா திகழும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், என பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

கடந்த அதிமுக ஆட்சியில், பொதுமக்கள் நலனில் சிறிதும் அக்கரையின்றி வீட்டுமனை பட்டா வழங்குவதை தவிர்த்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களை தமிழ்நாட்டில் 86000 ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு பட்டா அளித்து மகிழ்ச்சி அடையச்செய்து, தமிழ்நாட்டு அனைத்து பிரிவு மக்களின் நலன் பாதுகாக்கும் அரசு என நிருப்பித்துள்ளார்.

வரி கொடுக்காமல், வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் வஞ்சக சூழ்ச்சியினை முறியடித்து அதன் சுவடே நம் மீது படாமல், நம் வாழ்வில் விடியலை ஏற்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களின் பிறந்த நாள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது என்று மின்கழகத்தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### ஒன்றிய கல்வித்துறை இணை அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்பு! சென்னை - ஐ.ஐ.டி. வாயிலில்

# மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கருப்புக்கொடி போராட்டம்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமையில்!

சென்னை, மார்ச் 1 -

தமிழ்நாட்டிற்கு கல்வி நிதி தரமறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, ஒன்றிய கல்வித்துறை இணை அமைச்சரின் சென்னை வருகைக்கு எதிராக தி.மு.க. மாணவரணி சார்பில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்...



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மும்மொழி கொள்கைமூலம் தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திண்டிவனம் தபால் நிலையம் அலுவலகம் எதிரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கண்டன உரை நிகழ்த்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ் செல்வன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மான குழு தலைவர் உறுப்பினர் செஞ்சி சிவா, திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தேசியக் கல்விக் கொள்கையையும், மும்மொழிக் கொள்கையையும் ஏற்றுக் கொண்டால்தான், தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய கல்விக்கான நிதியைத் தருவோம் என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராகவும் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமைக்கு எதிராகவும் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராகவும் ஆணவத்தோடு பேசி இருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தியை திணிக்க முயலும் சூழ்ச்சிக்கு எதிராக மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பாக கடந்த 25ம் தேதி தமிழ்நாடு முழுவதும் 68 இடங்களில் மாபெரும் கண்டன போராட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், நேற்று தமிழ்நாடு வருகை தருவதாக இருந்த ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு எதிராகக் கருப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்த மாணவர் கூட்டமைப்பு உள்பட பல்வேறு அமைப்புகளும் திட்டமிட்டிருந்த நிலையில், தர்மேந்திர பிரதானின் பயணம் ரத்து செய்யப்பட்டது.

இருப்பினும், சென்னை ஐ.ஐ.டி.யில் நடைபெறும் விழாவில் ஒன்றிய கல்வித்துறை இணை அமைச்சர் சுகந்த மஜூம்தார் கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்டது. அவருக்கு எதிராக கருப்புக் கொடி காட்டி போராட்டம் நடத்தப்படும் என்று மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு அறிவித்திருந்தது.

அதன்படி, தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமையில், மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில், சென்னை, ஐ.ஐ.டி. நுழைவு வாயிலில் மாபெரும் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்...

மும்மொழிக்கொள்கை என்ற பெயரில், மறைமுகமாக இந்தியையும், சமஸ்கிருதத்தையும் திணிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு சதி செய்வதாக திமுக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் குற்றஞ்சாட்டினார்.. மோடி அரசின் மிரட்டலுக்கு தமிழ்நாடு ஒருபோதும் அஞ்சாது அடிபணியாது என்று போராட்டத்தின்போது சி.வி.எம்.பி.எழிலரசன் கூறினார்.

---

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

# மாவட்டப் பிரதிநிதி பி.சக்கரபாணி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, மார்ச் 1 -

விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் நகரக் கழக மாவட்டப் பிரதிநிதி பி.சக்கரபாணி உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது உடலுக்கு கழகத்தினர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.



வானூர் சட்டமன்றத் தொகுதி, வானூர் மேற்கு ஒன்றிய செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றிய கழக செயலாளர் இரா.மைதிலி ராஜேந்திரன், கண்டமங்கலம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.எஸ்.வாசன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருவக்கரை ஜி.பாஸ்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.இளங்கோவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.